விரைவு நீதிமன்றம் (நடுவர் நிலை),
கோவில்பட்டி
முன்னிலை: **திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், கோவில்பட்டி(மு.கூ.பொ).

2026 வது வருடம், ஜீன் மாதம், 17–ம் நாள் புதன்கிழமை

சுருக்கு முறை விசாரணை வழக்கு எண். 28/2021
CNR. No. TNTT12-002074-2021

வ.எண்;		**புகார்தாரர் விபரங்கள்**
1.	புகார்தாரரின் பெயர்	R. கோபாலகிருஷ்ணன்
2	புகார்தாரரின் தந்தை பெயர்	ராமசாமி
3	புகார்தாரரின் வேலை	–
4	புகார்தாரரின் முகவரி	73–சி, காயிதே மில்லத் தெரு, கழுகுமலை
5	புகார்தாரரின் வயது	46/2021
		எதிரியின் விபரங்கள்
6	எதிரியின் பெயர்	T.S. ஆபிரகாம்
7	எதிரியின் தந்தை பெயர்	செந்தூர்
8	எதிரியின் வேலை	T.S. Food Products உரிமையாளர்
9	எதிரியின் முகவரி	89–ஈ, கிரிப்பிரகார வீதி, கழுகுமலை
10	எதிரியின் வயது	–
		தேதி
11	சம்பவம்	27.07.2021
12	புகார்	17.08.2021
13	எதிரியின் கைது	எதிரி கைது செய்யப்படவில்லை.
14	பிணை விபரம்	எதிரி பிணை பெறவில்லை.
15	வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி	08.08.2024
16	வழக்கு விசாரணை முடிக்கப்பட்ட தேதி	16.06.2026

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 18:14:40 +0530

17	உத்தரவு	எதிரி மீது மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரியை குவி.மு.ச 255(2)ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து ஆறு மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், நஷ்டஈடு தொகையாக ரூ.5,70,000/- காசோலை திருப்பப்பட்ட நாள் முதல் நஷ்ட ஈடு தொகை கொடுக்கும் வரை ஆண்டு வட்டி 9% கணக்கிட்டு எதிரி, புகார்தாரருக்கு கொடுக்கும்படியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.
18	தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம்	1.மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. 2. எதிரிக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
19	காலதாமதத்திற்கான விளக்கம்	எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்ததினாலும், சாட்சிகளின் விசாரணையினாலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு கடந்த 19.08.2021 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன் 16.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.ஆழ்வார்சாமி சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K. வினோத்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

தீர்ப்புரை

1. இவ்வழக்கானது புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டிற்கு எதிரி மீது விசாரணை நடத்தக் கோரி குவி.மு.ச 255(2)ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்புகார் ஆகும்.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:14:47 +0530

புகார்மனுவின் சுருக்கம்:

2. புகார்தாரரும், எதிரியும் பல வருடங்களாக நன்கு பழக்கமானவர்கள். அந்த பழக்கத்தின் அடிப்படையில் எதிரி, புகார்தாரரிடமிருந்து கடந்த 17.02.2019 அன்று ரூ.4,50,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/−க்கு ரூ.1/− வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு புரோநோட்டு ஒன்றும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். ஆனால் எதிரியானவர் மேற்படி கடன் தொகைக்கு அசலோ, வட்டியோ செலுத்தாமல் இருந்து வந்துள்ளார். மேற்படி கடன் மற்றும் வட்டி தொகையை திரும்ப செலுத்தக்கோரி புகார்தாரர், எதிரியிடம் பலமுறை கேட்டதற்கிணங்க எதிரி கடந்த 16.05.2021 அன்று புகார்தாரரின் வீட்டிற்கு வந்து மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்துவதாக உறுதி கூறியுள்ளார். எதிரி, புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய 27 மாத வட்டி தொகையை கணக்கிட்டு பார்த்ததில் ரூ.1,21,500/− வந்துள்ளது. மேற்படி அசல் மற்றும் வட்டி தொகையை சேர்த்து மொத்தமாக ரூ.5,70,000/−ஐ செலுத்திவிடுவதாக எதிரி ஒப்புக்கொண்டு, எதிரி கணக்கு வைத்துள்ள தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, குருவிகுளம் கிளையின் காசோலை எண்.047647 கொண்ட ரூ.5,70,000/−ற்கான காசோலையினை 20.07.2021 என தேதியிட்டு எதிரி, புகார்தாரர் பெயருக்கு வரைந்து கையெழுத்திட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளார்.

3. அதன்பிறகு மேற்படி காசோலையினை கடந்த 26.07.2021 அன்று புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கழுகுமலை கிளையில் காசோலையை பணமாக்கும் பொருட்டு தாக்கல் செய்தபோது, எதிரியின் காசோலை "Funds Insufficient" என்ற வங்கி குறிப்புடன் 27.07.2021 அன்று திருப்பப்பட்டுள்ளது.

4. அதன்பின் புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலமாக 29.07.2021ம் தேதி எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பானது "Addressee Left with Out Instructions" என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. எதிரி மேற்படி சரியான முகவரியில் குடியிருந்து கொண்டு வேண்டுமென்றே மேற்படி அறிவிப்பை திருப்பி அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பின் அஞ்சல் அலுவலரின் 30.07.2021 தேதியிட்ட குறிப்பே எதிரிக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதாக கருதப்படுகிறது. எதிரி இதுவரை பதிலோ, பணமோ தரவில்லை. எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தும், எதிரி வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்து மோசடி செய்து ஏமாற்றி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்தை செய்துள்ளார். எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும்,

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:14:54 +0530

புகார்தாரருக்கு இழப்பீடும் வழங்க வேண்டுமென்று புகார்தாரர் தரப்பில் குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி புகாரானது பரிசீலிக்கப்பட்டு போதிய முகாந்திரம் இருந்ததால் 19.08.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். குவி.மு.ச 255(2)ன் கீழ் எதிரியிடம் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138ன் கீழான குற்றச்சாட்டு குறித்து 08.08.2024 அன்று கேள்வி கேட்கப்பட்டபோது எதிரி இது பொய் வழக்கு என்று மறுத்துள்ளார்.

6. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பு.சா.ஆ. 1 முதல் பு.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் எ.சா.ஆ.1 சான்றாவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர் தரப்பில் பு.சா.2 விசாரிக்கப்பட்டு ச.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சி முடித்துக்கொள்ளப்பட்டது.

<u>புகார்தாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>

7. பு.சா.1 கோபாலகிருஷ்ணன் தனது முதல் விசாரணையில் புகார் மனுவை ஒத்து முதல்விசாரணையை ஆணையுறுதி பத்திரமாக தாக்கல் செய்துள்ளார். பு.சா.1–ன் மூலமாக 1. 20.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, குருவிகுளம் கிளையின் ரூ.5,70,000/–ற்கான காசோலை எண்.047647 கொண்ட காசோலை அசல் (**பு.சா.ஆ.1**), 2. 26.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கழுகுமலை கிளையின் காசோலையை வசூலுக்கு செலுத்தியதற்கான செக் டெப்பாசிட் செல்லான் அசல் (**பு.சா.ஆ.2**), 3. 27.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கழுகுமலை கிளையின் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல் (**பு.சா.ஆ.3**), 4. 29.07.2021 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் (**பு.சா.ஆ.4**), 5. எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல் (**பு.சா.ஆ.5**), 6. எதிரியின் ஆதார் அட்டை புகைப்பட நகல் (நகல் ஆவணம் என்பதால் எதிர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடப்பட்டுள்ளது) **(பு.சா.ஆ.6)**, 7.மாண்புமிகு கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட I.P.No.6/2021–ல் சார்பு செய்யப்பட்ட மனு நீதிமன்ற நகல் **(பு.சா.ஆ.7)**, 8. 17.02.2019 தேதியிட்ட எதிரி, புகார்தாரருக்கு ஏற்படுத்திக்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:01 +0530

கொடுத்த புரோநோட்டு அசல் **(பு.சா.ஆ.8)** ஆகியவை சான்றாவணங்களாக குறியிடப்பட்டுள்ளது. மேலும் பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டு 1. கோவில்பட்டி சார்பு நீதிமன்றம் I.P.No.6/2021 வழக்கில் நீதிமன்ற ஊழியர் புகார்தாரரிடம் நேரில் வந்து அறிவிப்பு சார்பு செய்து, புகார்தாரரிடம் கையொப்பம் பெறப்பட்ட அறிவிப்பின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **(எ.சா.ஆ.1)** சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பு.சா.2 பொன்வேல்முருகன், மேலாளர், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, குருவிகுளம் கிளை மூலமாக 1. 01.04.2021 முதல் 31.12.2021 வரையுள்ள எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று **(ச.சா.ஆ.1)** சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இத்துடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டது.

9. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமானவற்றை 06.02.2025 அன்று கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி சாட்சியத்தை பொய் என்று மறுத்தும் தங்களது தரப்பில் சாட்சியம் உண்டு என்று கூறினார்.

10. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்பதால் இத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

11. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக ஆராய்ந்து பரிசீலிக்கப்பட்டது.

12. குற்றமுறையீட்டாளர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மாற்றுமுறையாவணங்கள் சட்டப் பிரிவு 138 ன் படியான எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்க குற்றமுறையீட்டார் தன்னை பு.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளதாகவும், புகார்தாரர் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு கீழான தேவைகளை கடைபிடித்துள்ளதாகவும், பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் வாயிலாக குற்றமுறையீட்டாளர் தனது வழக்கினை நிரூபித்துள்ளதாகவும், எதிரிக்கு முறையாக சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி காசோலையிலுள்ள கையொப்பத்தை எதிரி மறுக்கவில்லை என்றும், எதிரி தரப்பு வழக்கு

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:08 +0530

நிரூபிக்கப்படவில்லை என்றும், புகார்தாரர் தனது வழக்கினை சட்டப்படி நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு உரிய இழப்பீடும் வழங்கி தீர்ப்பளிக்குமாறும் புகார்மனுவை ஒத்திசைந்து வாதிட்டுள்ளார்.

13. எதிரி தரப்பில் இது பொய் வழக்கு என்றும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரி, புகார்தாரரிடமிருந்து புகாரில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவித கடனும் பெறவில்லை என்றும், எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய தொகையை முழுவதுமாக திருப்பி செலுத்திவிட்டதாகவும், கடனுறுதி சீட்டிலுள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்றும், புகாரிலுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும், எதிரிக்கு முறையாக சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றும், புகார்தாரருக்கு மேற்படி I.P.No.6/2021 வழக்கில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட அன்றே புகார்தாரர் இந்த வழக்கிடை காசோலையில் தேதி நிரப்பி வசூலுக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கிடை கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், மேற்படி IP மனுவில் எதிரி மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், புகார்தாரரின் வழக்கு முரண்பாடாக இருப்பதாகவும், எனவே எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்று எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை ஆய்வு K. Seenivasan Vs. Shanthi Joseph, W/o. Late T.E.Joseph & Ors. [2024 Supreme(Mad) 135] மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் N. Paraeswaran unni Vs. G. Kannan & another [2017 Supreme(SC) 278] ஆகிய தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், புகார்தாரர் தரப்பு வழக்கானது எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை தகு நிலை ஐயப்பட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

14. புகார்தாரர் பெயருக்கு வரையப்பட்ட 20.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, குருவிகுளம் கிளையின் ரூ.5,70,000/-ற்கான காசோலை எண்.047647 கொண்ட (பு.சா.ஆ.1) காசோலையை, தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கழுகுமலை கிளையில் செக் டெப்பாசிட் செல்லான் நகல் (பு.சா.ஆ.2)-ன் மூலம் 26.07.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்தபோது பு.சா.ஆ.1 காசோலையானது "Funds Insufficient" என்ற

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:15 +0530

காரணம் குறிப்பிட்டு 27.07.2021 என்ற தேதியிட்ட (பு.சா.ஆ.3) குறிப்பாணை மூலம் திருப்பப்பட்டுள்ளது. புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு 29.07.2021 தேதியிட்ட சட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.4)ஐ அனுப்பியுள்ளார். மேற்படி பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு 30.07.2021 அன்று "Addressee Left with Out Instructions" என்ற குறிப்புடன் அஞ்சலக உறை (பு.சா.ஆ.5) மூலம் திருப்பட்டுள்ளது.

15. புகார்தாரர் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் 17.08.2021 அன்று தாக்கல் செய்துள்ளார். எனவே புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழான சட்டப்பூர்வமான நிபந்தனைகளை கடைபிடித்துள்ளார்.

16. சட்டப்பூர்வமான கடனுக்காகத்தான் காசோலை வரையப்பட்டது என்று மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவுகள் 118 (a) மற்றும் 139 ன் கீழ் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது. மேற்படி அனுமானத்தை எதிரியால் மறுதளிக்க முடியும். பு.சா.ஆ.1 காசோலை எதிரியினுடையது இல்லை என்று எதிரி தரப்பில் மறுக்கவில்லை. மேலும் இந்த வழக்கு பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. புகார்தாரர், எதிரிக்கு அனுப்பிய பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு எதிரி தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு மேலமை நீதிமன்ற தீர்ப்பு படி "Addressee Left with Out Instructions" என்று குறிப்பிட்டு சட்ட அறிவிப்பு திருப்பப்படும் போது அதை முறையாக சார்வு செய்யப்பட்டதாக கருத முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக எதிரி தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முகவரி எதிரியினுடையது இல்லை என்று திருப்பப்படாமல் "Addressee Left with Out Instructions" என்ற குறிப்புடன் திருப்பப்பட்டுள்ளதாலும், எதிரி கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த I.P.No.6/2021 மனுவில் எதிரியால் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு தான் மேற்படி சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதாலும், "Addressee Left with Out Instructions" என்று அறிவிப்பு திருப்பப்படும் போது அதை முறையாக சார்பு செய்யப்பட்டதாக கருத முடியாது என்று மேற்படி மேலமை நீதிமன்ற தீர்ப்புரையில் விவாதிக்கப்படவில்லை என்பதாலும், மேற்படி சட்ட அறிவிப்பு முறையாக எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது தெளிவாகிறது. புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் மாற்றுமுறையாவணச்சட்டப்பிரிவு 139 கீழான அனுமானம் முதல்நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:21 +0530

17. மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் M/s. laxmi Dyechem (Vs) State of Gujarat & Ors. (2013 CRI.L.J. 3288) என்ற வழக்கில்,

" Therefore if the accused is able to establish a probable defence which creates doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can Fail. The accused can rely on the materials submitted by the complainant in order to raise such defence and it is inconceivable that in some cases the accused may not need to adduce the evidence of his/her own. If however, the accused/drawer of a cheque in question neither raises a probable defence nor able to contest existence of a legally enforceable debt or liability, obviously statutory presumption under Section 139 of the NI Act regarding commission of the offence comes into play if the same is not rebutted with regard to the materials submitted by the complainant" என்று தீர்ப்பளித்துள்ளது.

18. புகார்தாரர் சார்பாக முதல் நோக்கில் அனுமானிக்கப்படும்போது, பு.சா.ஆ.1 காசோலை சட்டப்பூர்வமான கடனுக்காக வழங்கப்படவில்லை என்று நிரூபிக்கும் சுமை எதிரி மேல் உள்ளது. குவி.மு.ச 255(2)ன் கீழ் இந்நீதிமன்றம் எதிரியிடம் கேள்வி கேட்டபோது எதிரி தரப்பில் பொய் சாட்சி என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டதை மட்டும் வைத்து சட்டப்பூர்வமான அனுமானத்தை எதிரி மறுதளித்ததாக கருதமுடியாது. ஏனென்றால் எதிரி உறுதியான எதிர்வாதத்தை நிரூபிப்பதன் மூலமே சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுதளிக்கமுடியும்.

19. குவி.மு.ச 313(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டபோது எதிரி தரப்பில் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரியினுடையது இல்லை என்றும், பு.சா.ஆ.1 காசோலை எதிரியினுடைய வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. புகார்தாரர் தன்னை பு.சா.1 ஆக விசாரித்து பு.சா.ஆ.3 குறிப்பாணை மூலம் பு.சா.ஆ.1 காசோலை எதிரி வங்கி கணக்கில் "Funds Insufficient" என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது என்பதை புகார்தாரர் நிரூபித்துள்ளார். புகார்தாரர் சட்டப்பூர்வமான அறிவிப்பு (பு.சா.ஆ.4)ஐ எதிரிக்கு குறித்த காலக்கெடுவுக்குள் அனுப்பியுள்ளார் என்பதை திருப்பப்பட்ட அஞ்சலக உறை (பு.சா.ஆ.5) மூலம் நிரூபித்துள்ளார்.

20. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Indian Bank Association Case reported in 2014 (5) SCC 590 – என்ற வழக்கில் "We make it clear that if Provisos (a), (b) and (c) to section 138 of the Act are shown to have been complied with, technically the commission of the offence stands completed and it is for the accused to show that no offence could have been committed by him for specific reasons and defences" என்று தீர்ப்பளித்துள்ளது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 18:15:27 +0530

21. புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138ன் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் முதல் நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்பட்டு எதிரி தான் குற்றம் நடக்கவில்லை என்று அனுமானத்தை மறுதளிக்கவேண்டும். புகார்தாரர் தனது புகார் மனுவை ஒத்து முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்று எதிரி தரப்பில் நிறுவப்படவில்லை என்பதால், எதிரி மீது பொறுப்புநிலை ஏற்படுகிறது. பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது என்று தெளிவாகியுள்ள நிலையில் அதனால் எற்படும் அனுமானத்தை மறுதளிக்க வேண்டிய பொறுப்பு எதிரி மேல் உள்ளது. பு.சா.ஆ.6 எதிரியின் ஆதார் அடையாள அட்டை, நகல் ஆவணம் என்பதால் அதை சான்றாவணமாக குறியிட முடியாது என்பதால் எதிரி தரப்பில் ஆட்சேபனை அனுமதிக்கப்பட்டு மேற்படி பு.சா.ஆ.6 ஐ தகுதியான ஆவணம் இல்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.

22. புகார்தாரர் ரூ.4,50,000/-ஐ வங்கி மூலமாக இல்லாமல், பணமாக நேரடியாக எதிரிக்கு கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. புகார்தாரர் மேற்படி கடன் தொகைக்கான மூல வருமானம் சம்பந்தமான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரர், எதிரிக்கு கடன் கொடுத்தது சம்பந்தமாக எதிரி எழுதிக் கொடுத்த கடனுறுதி சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆனால் மேற்படி கடனுறுதி சீட்டு முதலில் தாக்கல் செய்யப்படாமல் பின்பு புகார்தாரர் மனு தாக்கல் செய்து பின்னிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாலும், மேற்படி கடனுறுதி சீட்டில் கையொப்பம் இட்ட சாட்சிகளை இந்த வழக்கில் விசாரிக்கவில்லை என்பதாலும், மேற்படி கடனுறுதி சீட்டு தகுதியானது இல்லை என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது காசோலை மோசடி வழக்கு என்பதாலும், மேற்படி கடனுறுதி சீட்டிற்கு பின்னிட்டு எதிரி காசோலை கொடுத்ததாலும், எதிரி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மேற்படி மேலமை நீதிமன்ற தீர்ப்பு உரிமையியல் சம்மந்தப்பட்டது என்பதாலும், இது குற்றவியல் வழக்கு என்பதாலும், கடனுறுதி சீட்டின் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பதை வைத்து மட்டும் புகார்தாரர் தரப்பு வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதாலும் எதிரி தரப்பு எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை. புகார்தாரரின் சட்ட அறிவிப்பிற்கும், புகார் மனுவிற்கும், முதல் விசாரணைக்கும் எந்தவித முரண்பாடுகளும் காணப்படவில்லை. பு.சா.ஆ.7 ஐ பார்வையிடும் போது எதிரி, புகார்தாரர் உட்பட பல நபர்களிடம் கடன் பெற்றுக்கொண்டு திருப்பி கொடுக்க முடியவில்லை என்பதால் நீதிமன்றத்தில் IP மனு தாக்கல்

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:33 +0530

செய்துள்ளது புலப்படுகிறது. மேலும் பு.சா.ஆ.7 ஐ பார்வையிடும் போது எதிரி, புகார்தாரரிடம் கடன் பெற்றுள்ளதும், புகார்தாரர் 5வது எதிர்மனுதாரராக மேற்படி IP மனுவில் சேர்க்கப்பட்டுள்ளதும் தெளிவாகிறது. எதிரி, வட்டிக்கு புகார்தாரரிடம் கடன் தொகையினை பெற்று கடனுறுதி சீட்டினை எழுதிக் கொடுத்துவிட்டு, பின்பு அசலுக்கும், வட்டிக்கும் சேர்த்து வழக்கிடை காசோலை கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. மேலும் எதிரி மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டதாக மேற்படி IP மனுவில் குறிப்பிட்டுள்ளதாக எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில் கடன் தொகையை திருப்பி செலுத்தியதற்கான எந்த ஆவணத்தையும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்பதால் எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை.

23. மேற்படி வழக்கிடை காசோலை எவ்வாறு புகார்தாரரிடம் சென்றதாக எதிரி தரப்பில் முறையாக விளக்கப்படவில்லை. எதிரி முன்பு குடியிருந்து வந்த முகவரிக்கு புகார்தாரர் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ள நிலையில், அந்த சட்ட அறிவிப்பு திருப்பப்பட்டாலும் அதற்கு எந்தவித பதில் அறிவிப்பும் எதிரி தரப்பில் அனுப்பப்படவில்லை. மேலும் பு.சா.ஆ.7 ஐ கவனமாக ஆராயும் போது, எதிரி தொழில் தேவைக்காக பலரிடம் வட்டிக்கு பணத்தைப் பெற்றுக் கொண்டு தொழில் நஷ்டம் அடைந்ததால் பணத்தை திருப்பிக் கொடுக்க முடியாமல் போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 17.02.2019 அன்று எதிரிக்கு புகார்தாரர் வட்டிக்கு கடன் கொடுத்ததாகவும், அதற்கு எதிரி வட்டியோ அசசோ திருப்பி செலுத்தவில்லை என்றும், கடந்த 16.05.2021 அன்றுதான் எதிரி வழக்கிடை காசோலையை கொடுத்ததாகவும் புகார்தாரர் வழக்கு உள்ள நிலையில், சுமார் 2 ஆண்டு காலத்துக்கு மேலாக எதிரி வட்டியோ அசலோ திருப்பி செலுத்தாத நிலையில், அதன் பிறகுதான் எதிரி காசோலை கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. சா.சா.ஆ.1 எதிரியின் நிறுவனத்தின் வங்கி கணக்கு அறிக்கையை பார்வையிடும் போது அதில் ரூ.8/- மட்டுமே இருப்பு இருப்பது தெரிகிறது.

24. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், தான் ரியல் எஸ்டேட் மற்றும் விவசாயம் தொழில் செய்து வருவதாக சாட்சியமளித்துள்ளதன் மூலம் புகார்தாரருக்கு கடன் கொடுப்பதற்கான போதுமான வருமானம் வருகிறது என்பது வெளிப்படுகிறது. மேலும் புகார்தாரர், எதிரிக்கு ரூ.4,50,000/- கடன் கொடுத்துள்ள நிலையில், எதிரி வட்டித்தொகை மற்றும் அசல் தொகையை ஒப்புக்கொண்டு ரூ.5,70,000/-ற்கு காசோலை கொடுத்துள்ளதால் வழக்கிடை காசோலை தொகை சட்டப்பூர்வமான கடனுக்காக வழங்கப்பட்டது என்பது தெளிவாகிறது. எதிரி வட்டி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 18:15:41 +0530

தொகையை செலுத்தியதாக எந்த ஆவணமும் எதிரி தரப்பில் குறியிடப்படவில்லை. புகார்தாரர் வழக்கிடை காசோலையை கடந்த 26.07.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரி தாக்கல் செய்த மேற்படி IP வழக்கின் அறிவிப்பு 26.07.2021 அன்று புகார்தாரருக்கு சார்பு செய்யப்பட்டுள்ளது. எதிரி மேற்படி IP வழக்கை தாக்கல் செய்தபிறகு, அதன் அறிவிப்பை பெற்றுக்கொண்ட புகார்தாரர், அதன்பிறகு காசோலையை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக எதிரியின் எதிர்வாதம் உள்ளது. மேற்படி IP வழக்கின் அறிவிப்பு சார்பு செய்த அன்று புகார்தாரர் வழக்கிடை காசோலையை வசூலுக்கு வங்கியில் தாக்கல் செய்துள்ளதை வைத்து மட்டும் புகார்தாரர் தரப்பு வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

25. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், தான் எதிரிக்கு கடன் கொடுக்கும்போது பால்சாமி மற்றும் விஜயராஜ் ஆகியோர்கள் உடனிருந்ததாக சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்படி நபர்கள் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் மேற்படி கடனுறுதி சீட்டு குறித்து தெளிவாக சாட்சியமளித்துள்ளதால் மேற்படி கடனுறுதி சீட்டு மீது நம்பிக்கை ஏற்படுகிறது. எதிரி தாக்கல் செய்த வழக்கில் புகார்தாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதை புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் மேற்படி IP வழக்கின் அறிவிப்பு காலை 11 மணிக்கு புகார்தாரருக்கு சார்பு செய்யப்பட்டது என்றும், வழக்கிடை காசோலையை காலை 10 மணிக்கு வங்கியில் தாக்கல் செய்தேன் என்றும் புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். மேற்படி IP வழக்கின் அறிவிப்பு வாங்குவதற்கு முன்பே வழக்கிடை காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. ஆனால் மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிறகுதான் வழக்கிடை காசோலையை வங்கியில் தாக்கல் செய்ததாக எதிரியின் எதிர்வாதம் உள்ளது.

26. மேற்படி IP வழக்கு தாக்கல் செய்வதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு எதிரி கழுகுமலையில் குடியிருக்கவில்லை என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், எதிரி கழுகுமலையில் குடியிருந்து வருவதாக மேற்படி IP மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது முரண்பாடாக உள்ளது. காசோலையில் குறிப்பிட்ட தேதிக்கு பிறகு காசோலையை வசூலுக்கு போடுமாறு எதிரி சொன்னதால், காசோலை தேதிக்கு பிறகு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததாக புகார்தாரர் தனது குறுக்கு

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:48 +0530

விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். எதிரி தாக்கல் செய்த வழக்கில் எதிரிக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்படலாம் என்பதால் அவசர அவசரமாக புகார்தாரர் வழக்கிடை காசோலையை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக உள்ள எதிரியின் எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனென்றால் IP வழக்கின் உத்தரவு குற்றவியல் வழக்கினை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.

27. மேற்படி கடனுறுதி சீட்டு புகார்தாரரால் மோசடியாக தயாரிக்கப்பட்டதாக எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், அது தொடர்பாக எந்த ஆவணமும், சாட்சியமும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. பு.சா.2 எதிரியின் நிறுவனத்தின் வங்கி கணக்கு அறிக்கை குறித்து சாட்சியமளித்துள்ளார். பு.சா.2 தனது முதல் விசாரணையில், எதிரியின் வங்கி கணக்கில் பணமே இல்லை என்றும், ஆனால் மைனஸ் ரூ.42,539/– உள்ளது என்றும், அந்த வங்கி கணக்கு Dormant நிலையில் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் பு.சா.2 தனது குறுக்கு விசாரணையில் 2 ஆண்டுகள் ஒரு வங்கி கணக்கு பரிவர்த்தனை செய்யப்படாமல் தொடர்ந்து இருந்தால் அது Dormant நிலையில் வைக்கப்படும் என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் பு.சா.2 தனது குறுக்கு விசாரணையில், 2018–ல் எதிரியின் வங்கி கணக்கு Dormant நிலையை வைக்கப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார். வழக்கிடை காசோலை எதிரியின் நிறுவனத்தை சார்ந்தது என்ற நிலையில் அந்த நிறுவனத்திற்கு வேண்டி எதிரி கையொப்பம் செய்துள்ள நிலையில் மேற்படி நிறுவனம் தொடர்பாக எதிரி கடன் பெறாமல் எதிரியின் சொந்த தேவைக்காக எதிரி கடன் பெற்றுள்ளதால் மேற்படி எதிரியின் நிறுவனம் இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்க்கப்படவில்லை.

28. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் பெரிய அளவில் முரண்பாடுகளின்றி சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை என்பதாலும், புகார்தாரர் பெரிய அளவில் முரண்பாடுகள் இன்றி தனது குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளதாலும், எதிரியின் எதிர்வாதத்தை நிரூபிக்க எதிரி தரப்பில் போதுமான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், எதிரியின் எதிர் வாதங்கள் முரண்பாடாக உள்ளதாலும், புகார்தாரர் தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:15:54 +0530

29. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு எதிரான மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு, எதிரி மாற்றுமுறையாவணச்சட்டப் பிரிவு 138ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

30. இவ்வழக்கானது காசோலை மோசடி வழக்கு என்பதாலும், எதிரியின் குற்ற செய்கைகளினால் புகார்தாரர் பாதிக்கப்பட்டு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாலும், இவ்வழக்கில் எதிரிக்கு குற்றவாளிகளுக்கான நன்னடத்தைச் சட்டத்தின் பயனை வழங்குவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக

31. இறுதியாக எதிரி மீது மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138ன் கீழான குற்றத்திற்கு ஆறு மாதங்கள் (6) கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும், இவ்வழக்கில் வழக்கு காசோலைக்கான தொகை ரூ.5,70,000/- என்பதை கருத்திற்கொண்டும், இவ்வழக்கு 2021ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு 4 வருடத்திற்கு மேலாக நிலுவையில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், 4 வருடங்களாக புகார்தாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை கருத்திற்கொண்டும், எதிரி கு.வி.மு.ச. பிரிவு 357(3)ன் படி காசோலைக்கான தொகை ரூ.5,70,000/-(ரூபாய் ஐந்து இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஐ 9% ஆண்டு வட்டியுடன் சேர்த்து காசோலை திருப்பப்பட்ட நாளான 27.07.2021 முதல் காசோலைக்கான தொகையை திருப்பி கொடுக்கும் வரையிலான தேதி வரை கணக்கிட்டு மொத்த இழப்பீடாக புகார்தாரருக்கு கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத்தவறும் பட்சத்தில் எதிரிக்கு கூடுதலாக மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் குவி.மு.ச 255(2)ன் படி தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138-ன் கீழான தண்டனையை அனுபவித்த பிறகு, மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறினால் விதிக்கப்படும் மேற்படி தண்டனையை எதிரி ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும். இந்த வழக்கில் இழப்பீட்டு தொகை உத்தரவிடப்பட்டுள்ளதால் எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:16:01 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பிறகு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 வருடம் ஜீன் மாதம், 17–ம் தேதி புதன்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 18:16:08 +0530

நீதித்துறை நடுவர்.
விரைவு நீதிமன்றம்
கோவில்பட்டி(மு.கூ.பொ)

<u>இணைப்பு:</u>

புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:

புகார்தாரர் தரப்பு சாட்சிகள் எண்	சாட்சிகளின் பெயர்	விளக்கம்
1.	கோபாலகிருஷ்ணன்	புகார்தாரர்– பு.சா.1
2.	பொன்வேல்முருகன்	மேலாளர், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, குருவிகுளம் கிளை–பு.சா.2

புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
பு.சா.ஆ.1	20.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, குருவிகுளம் கிளையின் ரூ.5,70,000/–ற்கான காசோலை எண்.047647 கொண்ட காசோலை அசல்	பு.சா.1 – 19.08.2024
பு.சா.ஆ.2	26.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கழுகுமலை கிளையின் காசோலையை வசூலுக்கு செலுத்தியதற்கான செக் டெப்பாசிட் செல்லான் நகல்	பு.சா.1 – 19.08.2024

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.17 18:16:14 +0530

பு.சா.ஆ.3	27.07.2021 தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, கழுகுமலை கிளையின் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல்	பு.சா.1 – 19.08.2024
பு.சா.ஆ.4	29.07.2021 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல்	பு.சா.1 – 19.08.2024
பு.சா.ஆ.5	30.07.2021 தேதியிட்ட எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல்	பு.சா.1 – 19.08.2024
பு.சா.ஆ.6	எதிரியின் ஆதார் அட்டை புகைப்பட நகல்	பு.சா.1 – 19.08.2024
பு.சா.ஆ.7	மாண்புமிகு கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட I.P.No.6/2021–ல் சார்பு செய்யப்பட்ட மனு நீதிமன்ற நகல்	பு.சா.1 – 27.11.2024
பு.சா.ஆ.8	17.02.2019 தேதியிட்ட எதிரி, புகார்தாரருக்கு ஏற்படுத்திக் கொடுத்த புரோநோட்டு அசல்	பு.சா.1 – 27.11.2024

<u>சாட்சிகள் தரப்பு சான்றாவணம்:</u>

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
சா.சா.ஆ.1	01.04.2021 முதல் 31.12.2021 வரையுள்ள எதிரியின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று	பு.சா.2– 22.01.2025

<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>: இல்லை

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:16:20 +0530

<u>எதிரி தரப்பு சான்றாவணம்:</u>

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
எ.சா.ஆ.1	கோவில்பட்டி சார்பு நீதிமன்றத்தில் I.P.No.6/2021–ல் நீதிமன்ற ஊழியர் புகார்தாரரிடம் நேரில் வந்து அறிவிப்பு சார்பு செய்து, புகார்தாரரிடம் கையொப்பம் பெறப்பட்ட அறிவிப்பின் நீதிமன்ற சான்றிட்ட நகல்–20.07.2021	பு.சா.1 – 24.10.2024

குறிப்பு:

1. தீர்ப்பு பகரப்பட்ட அன்று எதிரி ஆஜர்.
2. தீர்ப்புரையின் நகல் எதிரிக்கு கட்டணமின்றி வழங்கப்பட்டது.
3. புகார்தாரருக்கு செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை எதிரி செலுத்தவில்லை.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.17 18:16:27 +0530

நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை)
கோவில்பட்டி(மு.கூ.பொ).